சார்பு நீதிமன்றம், மேலூர்
05.08.2025
ம.சா.1 – கருப்பையா த.பெ.வெள்ளைப்பிச்சன்
OS.No. :170/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் படிக்கவில்லை. நான் முன்பு தழிலில் கையெழுத்துக் கொண்டிருந்தேன் அதன்பின்னர் கை ஆடுவதால் போடுவதில்லை. பிராதில் இருக்கும் முதல் கையெழுத்து என்னுடையது தான். 2ம் வாதி மச்சக்காளை என்னுடைய அண்ணன் ஆவார். 3ம் வாதி சிவலிங்கம் என் மூத்த அண்ணன் காத்தானின் மகன் ஆவார். என் அப்பா வெள்ளைபிச்சானுக்கு மூன்று மகன்கள் 2 மகள்கள் வாரிசுகள் ஆவார்கள். என்னுடைய அண்ணன் காத்தான் இறந்துவிட்டார். மருதாயி, பிச்சம்மாள் ஆகியோர் என்னுடைய உடன்பிறந்த சகோரரிகள் ஆவார். இரண்டு சகோதரிகளும் தற்போது உயிருடன் இல்லை. என்னுடைய சகோரரிகளுக்கு வாரிசுகள் இருக்கிறார்கள். மருதாயிக்கு இரண்டு மகன்கள். பிச்சமாளுக்கு ஒரு மகன் மற்றும் 2 மகள்கள். வெள்ளைபிச்சான் நீண்ட நாட்கள் ஆகிறது சுமார் 30 – 35 வருடங்களுக்கு முன்னரே காலமாகிவிட்டார். அவருடைய இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தகப்பனாருக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்து புஞ்சைக் காடு ஆகும். சர்வே எண்.313/1, 55 செண்டுக்காக தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி வழக்குச் சொத்தானது என் தந்தைக்கு அனுபவ ரீதியாக ஜாரியாக கொடுக்கப்பட்டு அதன் பின்னிட்டு என் சகோதரர்கள் அனுபவித்து தற்போது என் பெயரில் பட்டா உள்ளது. என் அப்பாவிற்கு எப்போது அரசாங்கம் ஒப்படைவு செய்தது என்று தெரியவில்லை. அது நீண்ட காலத்திற்கு முன்பே நடந்தது. வழக்குச்சொத்து தொடர்பான ஆவணத்தையும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என் தகப்பனார் பெயரில் பட்டா இருந்ததா என்றால்

தெரியாது. ஆனால் அவர் நீண்டகாலமாக அனுபவித்து வந்து என் பெயரில் பட்டா மாற்றப்பட்டது. என் பெயரில் 1995 ல் பட்டா வழங்கப்பட்டது. அனுபவத்தை வைத்து அளந்து எனக்கு பட்டா கொடுத்தார்கள். அனுபவத்தின் அடிப்படையில் எனக்கு பட்டா கொடுக்கப்படவில்லை என்றும் தவறுதலாக வருவாய் துறையினர் எனக்கு பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. விசாரணை செய்து எனக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும் ஆவணங்கள் எதையும் பரிசீலனை செய்யாமல் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்திற்கான நான்குமால் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்து விவரத்தில் 3 வீடுகள் உள்ளது. ஆனால் வழக்குரையில் வழக்குச்சொத்து கதவிலக்கம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து விவரத்தில் இல்லை. வழக்கில் உள்ளது. வழக்குச்சொத்தில் உள்ள என்னுடைய வீட்டின் நீளம் 55 அடி அகலம் 22 அடி, ஓட்டு வீடாகும். மேற்படி வீடு 1974 ல் நான் கட்டினேன். மேற்படி வீடு கட்டுவதற்கு ஒரே படி பஞ்சாயத்தில் அனுமதி பெற்றேன் என்றால் பெற்றேன். எழுத்து மூலமாக அனுமதி பெற்றேன். மேற்படி அனுமதி என்னிடம் தான் உள்ளது. 1ம் பிரதிவாதி பிச்சாமாளுடைய தகப்பானர் பெயர் அவயன். அவயன் பெயரில் 4 ஏக்கர் 61 செண்ட் ஜாரி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் மட்டும் தான் அரசு கொடுத்தது. மேற்கொண்டு 1 ஏக்கர் பாட்டன் மகன் பூசாரி என்பவரிடமிருந்து அவயனுடைய மகன் பூசாரி 1 ஏக்கர் கிரயம் பெற்றுள்ளார். அவயனும் அவருடைய மனைவி இருவருமே இறந்துவிட்டார்கள். அவயன் உயிருடன் இருந்து காலத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் OS.213/2000என்ற வழக்கை என்மீதும் மற்றும் சிலர் மீதும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்மீதும் செவத்தாள், பனையம்மாள் ஆகியோரின் மீதும் தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கானது சொத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மதுரை 1வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் AS.161/2001 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் முன்னிலையாகததால் எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தோன்றா தரப்பினர் உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு மேல்நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நிலுவையில் தான் உள்ளது.

( மேற்கொண்டு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.05 18:31:16 +0530

Sub Judge

Melur